**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**
**முன்னிலை: திருமதி.B.வித்யா,L.L.M.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.**
**வழக்கு எண்.C.C. 112/2020**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.06.2025.

**அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயகுமார். | தொழில் | : கூலி |
| தந்தை பெயர் | : ராமசாமி | | |
| கிராமம் | : பொன்பத்தி | வயது | : 31 |

சாட்சியையும் எதிரிகளையும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.சுரேந்தர் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் பொன்பத்தி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 (அம்மணி) என் தாய். அ.சா.2 (பரசுராமன்) எனது அண்ணன். ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும்.

2. கடந்த 29.01.2018–ஆம் தேதியன்று மாலை 05.30 மணியளவில் நானும், எனது அண்ணன் அ.சா.2–ம் எங்கள் நிலத்தை சுற்றி பார்த்து கொண்டிருந்த போது 1–ஆம் எதிரி எங்களிடம் வரப்பில் நடந்து செல்லக்கூடாது என்று கூறினார். பேசிக்கொண்டிருந்த போதே 1–ஆம் எதிரி என்னையும் என் அண்ணனையும் கத்தியால் தாக்கிவிட்டார். அதில் எனது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. எனது அண்ணனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நாங்கள் சத்தம் போடவே எனது மாமா பரசுராமன் அங்கு எங்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து சேர்த்தார். எனது அண்ணனை மேல் சிகிச்சைக்கு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

3. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்ட சங்கதிகளை தான் காவலர்கள் விசாரணையின் போதும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4 (பரசுராமன்) என்னுடைய உறவினர் என்றால் சரிதான். அவர் என்னுடைய மாமா என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5(மூர்த்தி) என்னுடைய ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். 1–ஆம் எதிரி கடந்த 10 வருடங்களாக சென்னையில் வேலை செய்து வருகிறார் என்றால் அது விவரம் எனக்கு

தெரியாது. சண்டை நடந்த அன்று அவர் ஊரில் தான் இருந்தார். நானும் என் அண்ணனும் எங்கள் ஊரில் வசித்து விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நானும் என் அண்ணனும் மட்டும் தான் வயலுக்கு சென்றோம் என்றால் எனது அண்ணன் களை பறித்து கொண்டிருந்தார். நான் அங்கு சென்றிருந்தேன். அன்றைய தினம் 8 நபர்கள் எங்கள் நிலத்தில் களை பறித்துக்கொண்டிருந்தனர்.

4. சண்டை நடந்த போது அவர்கள் யாரும் சண்டையை தடுக்கவில்லை என்றால் சத்தம் போட்ட பிறகு தான் அவர்கள் அங்கு வந்தார்கள். எங்களுக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே நிலம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். 2–ஆம் எதிரியின் சகோதரரிடம் எங்கள் குடும்பம் சிறிது நிலத்தை கிரையமாக பெற்றுள்ளது என்றால் நான் சிறு வயதாக இருந்த போதே கிரையம் பெற்றுள்ளார்கள். நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பு சொத்துக்களை 2–ஆம் எதிரியும் அவரது சகோதரர்களும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை. நாங்கள் மேற்குறிப்பிட்ட சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு அவர்களது குடும்பத்தின் சொத்துகளுக்கு பொதுவான ஏரிக்கால்வாய் மூலம் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தனர் என்றால் இல்லை. எங்களது குடும்பம் சொத்தை கிரையம் வாங்கிய பிறகு மேற்படி ஏரிக்கால்வாயை இடித்து விட்டோம் என்றால் இல்லை.

5. சம்பவ சமயத்தில் எதிரி அவரது நிலத்தில் நிலக்கடலை பயிர் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நிழலுக்காக ஒரு கொட்டகையை அவர்களது நிலத்தில் அமைத்திருந்தனர் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்னிட்டு எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே அவ்வப்போது வாய் தகராறு ஏற்படும் என்றால் சரிதான். நானும் எனது சகோதரரும் இந்த வழக்கிற்கு முன்னிட்டு 1–ஆம் எதிரி சென்னையில் இருந்தபோது அவ்வவ்போது மது அருந்தி விட்டு 2, 3 எதிரிகளிடம் அவர்களின் வீட்டில் வைத்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது எனது தாய் நிலத்தில் ஆட்களுடன் வேலை செய்திருந்தார். அவர்களும் சண்டையை தடுக்கவில்லை என்றால் சண்டை நடந்த சத்தம் கேட்டு அவர் அங்கு வந்து தடுத்தார். எனது தாய் சம்பவ இடத்திடம் வந்த போது எதிரிகள் அங்கு தான் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தில் எதிரிகள் என்னையும் எனது அண்ணனையும் மட்டும் தான் தாக்கினார்கள்.

6. சம்பவம் முடிந்த பிறகு நேராக மருத்துவமனைக்கு சென்றோம். நானும் எனது அண்ணனும் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம் என்றால் நான் செஞ்சியிலும், எனது அண்ணன் முண்டியம்பாக்கத்திலும் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். நான் மருத்துவமனையில் இருந்த போது காவலர்கள் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். நான் காவல்

நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நானும் எனது அண்ணனும் செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்த போதே காவலர்கள் வந்து விட்டனர்.

7. எதிரிகள் என்னை தாக்க பயன்படுத்திய கத்தியை காவலர்களிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அவ்வாறு நடைபெற்றது என்றால் மேற்படி கத்தியை நான் காவலர்களிடம் ஒப்படைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. நானும் எனது அண்ணனும் எதிரிகளிடம் சண்டை போடும் நோக்கத்துடன் வயலுக்கு சென்றோம் என்றாலும் அங்கு அவர்களை அடிக்க நாங்கள் ஓடி சென்ற போது கல் வைத்து கட்டப்பட்டிருந்த கொட்டகையில் மோதி அதன் விளைவாக எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதை வைத்து எதிரிகள் மீது புகார் அளித்துள்ளோம் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளின் நிலத்தை அபகரிக்க வேண்டி அ.சா.1 எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.